இதனைப்பற்றி என்ன? ....

# *பாவ அறிக்கையும் பாவமன்னிப்பும்*

## நான் இழிவான பரிதாபத்துக்குரியதோர் பாவியா?

லூக்கா 18:9–14 இலே பரிசேயனும் ஆயக்காரனும் பற்றிய இயேசுவின் உவமையானது எம் ஒவ்வொருவர் மீதும் விடுக்கும் கேள்விக்கணைதான்: நான் இழிவான பரிதாபத்துக்கு உரியதோர் பாவியா?

உவமையிலே வரும் பரிசேயர் தனித்த ஒருவரல்ல. நாமுந்தான் அநேகமாக எமது பாவ நிலைபற்றி உணர்வற்றவர் களாகவோ அல்லது அதனை ஏற்றுக்கொள்ளாதவர்களாகவோ இருக்கிறோம். சுய நீதியிலே பிறருடன் ஒப்பிடுவது என்பது எமக்கு எத்துனை எளிதாக உள்ளது. உவமையில் வரும் இரண்டாம் நபராகிய ஆயக்காரனும் தனித்த ஒருவரல்ல என்பதால் தேவனுக்கு நன்றி! இயேசு அவனுடன் இருக்கிறார். இயேசு அழைக்கும்போது பாவிகள் வருகிறார்கள். அவர்கள் இயேசுவின் மன்னிப்பையும் ஜிவனையும் இரட்சிப்பையும் பெற்றுக்கொள்கிறார்கள். ஆதலால் நாமுந்தான், நான் பாவி, "தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்று சொல்லக்கூடும். ஏனெனில் இயேசு பாவிகளின் நண்பன்.எமது கர்த்தரின் விலையேறப்பெற்ற கொடையாகிய பாவமன்னிப்பு பற்றியதுதான் பாவ அறிக்கை.

பாவ அறிக்கையிலும் பாவ மன்னிப்பிலும் சகல பாவங்களுக்குமான பூணமும் போந்ததுமான பலியாகத் தனது ஜீவ இரத்தத்தைச் சிந்திய இயேசுக்கிறிஸ்து, பாவமன்னிப்பின் ஜீவன் தரும் வாக்குத்தத்தை எம் செவிகளுள் பொழிகிறார். "என் மகளே, மகனே, சமாதானத்துடன் போ. உனது பாவங்கள் மன்னிக்கப் பட்டன." அந்த வாக்குத்தத்தத்தை நம்பி நாம் "ஆமென். ஆம் கர்த்தாவே அது நிஜம்" என்போம். தேவனுக்கே நன்றி!

## பாவ அறிக்கை என்பது என்ன?

*பாவ அறிக்கை இரு பகுதிகளைக் கொண்டது. முதலாவது நாம் எமது பாவத்தை அறிக்கையிடுகிறோம், அடுத்ததாக போதகரிடமிருந்து வரும் மன்னிப்பை தேவனிடமிருந்து வருவதுபோலவே, சந்தேகப்படாமல், பரலோகத்திலே தேவனுக்கு முன்பதாக எமது பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்பதை உறுதியாக நம்பியவர்களாக, நாம் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறோம்.*[1]

"நான் பிழை. வருந்துகிறேன். என்னை மன்னியுங்கள்" என்று கூறுவது கடினம். "பாவத்தின் சம்பளம் மரணம்" என தேவனுடைய வார்த்தை தெளிவாகக்கூறுகிறது (ரோமர் 6:23). பாவ அறிக்கையிலும் பாவமன்னிப்பிலும், தேவனுடைய வார்த்தை அதன் வழியில் எம்மை பாவ அறிக்கைக்கு நகர்த்தி, எம்மைப் பற்றிய உண்மையை அறிக்கையிட்டு அவரது மன்னிப்புக்கான எமது தேவையையும் தெரிவிக்கிறது.

இயேசுக்கிறிஸ்துவினாலேதான் பாவ அறிக்கையும் பாவ மன்னிப்பும் ஆசீர்வாதமானதும் சந்தோஷமானதும், களிப்பானது மான ஒரு பரிமாற்றமாக ஆகிவிடுகிறது! "நாம் அவருக்குள் தேவனுக்கு நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காப் பாவமாக்கினார்" (2 கொரி 5:21). இயேசு சிலுவையிலே தொங்கிய போது அவர் எமக்காகப் பாவமாக ஆகினார். பாவத்துக்கான பரிகாரம் அவர். தனது நீதியான உக்கிரகோபத்தைத் தேவன் அவர்மீது பொழிந்தார். தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே சமாதானத்தைக் கிறிஸ்து வென்றார். பாவ அறிக்கையிலே, கிறிஸ்து எமது பாவத்துக்கான சுமையைத் தன்மீது ஏற்றுக்கொண்டு, அதற்கான மாற்றீடாக அவரது முழுமையான மன்னிப்பையும் அன்பையும் எமக்கு வழங்குகிறார்.

பாவ மன்னிப்பு என்பது பரிசுத்த ஞானஸ்நானத்தின் தொடரும் பணியாகும். அதன்போது, எமது பழைய ஆதாமிலிருந்த பாவ இயல்பானது மூழ்கடிக்கப்பட்ட, கிறிஸ்துவிலே புதிய மனிதன் எழும்புகிறான். பரிசுத்த பாவமன்னிப்பின்மூலம் நாம் "தேவனுடையை கொடையைப் பெற்றுக்கொள்கிறோம்," அதாவது எமது பாவங்களின் மன்னிப்பும், "எமது கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவிலே நித்திய ஜீவனும்" (ரோமர் 6:23).

## எந்தப் பாவங்களை நாம் அறிக்கையிடவேண்டும்?

*தேவனுக்கு முன்பதாக நாம் சகல பாவங்களுக்கும் குற்றவாளி என்பதை ஒத்துக்கொள்ளவேண்டும். கர்த்தர் கற்பித்த ஜெபத்தில் உள்ளது போலவே, நாம் உணர்வறிவற்றவர்களாயுள்ள பாவங்களும் இதற்குள் அடங்கும்; ஆனால் போதகருக்கு முன்பதாக நாம் அறிந்தும் எமது இருதயத்திலே உணர்ந்தும் உள்ளதான பாவங்களையே அறிக்கையிடவேண்டும். அவைகள் எவை? பத்துக் கற்பனைகளின்படு உங்களது ஸ்தானத்தைக் கருத்திற் கொள்ளவும். நீங்கள் ஒரு தந்தையா, தாயா, மகனா, மகளா, கணவனா, மனைவியா அல்லது பணியாளனா? நீங்கள் கீழ்ப்படியாமலும், உண்மையில்லாமலும் அல்லது சோம்பலாயும் இருந்திருக்கிறீர்களா? நீங்கள் சட்டெனக்கோபப்படுவரா, திமிராகப் பேசுபவரா அல்லது வம்புச்சண்டை பிடிப்பவரா? உங்களது வார்த்தையால் அல்லது செயலால் யாரையாவது புண்படுத்தி யிருக்கிறீர்களா? களவெடுத் தீர்களா, அசட்டையாக இருந்திருக் கிறீர்களா, எதையாவது வீண்விரயம் செய்திருக்கிறீர்களா அல்லது தீங்கு ஏதாவது செய்திருக் கிறீர்களா?*

தெய்வீக ஆராதனையிலே எமது பாவங்களை அறிக்கை யிடுகையில், தேவனுடைய பணியாளன் – எமது போதகர், கிறிஸ்து வின் நாமத்திலே எமது பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று சொல்வ தைக் கேட்போம். நாம் எந்தப் பாவங்களையிட்டு தெளிவாக அறிந் திருக்கிறோமோ, குறிப்பாக எம்மைக் குழப்புகிற பாவங்கள் எதுவோ, அவற்றை நாம் தனிப்பட்ட ரீதயிலே போதகரிடம் சென்று அறிக்கை யிட்டு பாவமன்னிப்பைப் பெறும்படியாகச் செல்லவோம். இவற்றை நாம் எமது போதகருக்கு அறிக்கையிட்டு, "நான் உன்னை மன்னிக் கிறேன்" எனும் கிறிஸ்துவின் வார்த்தைகளை நாம் கேட்போம்.

## சபை எந்த அதிகாரத்தால் எமது பாவங்களை மன்னிக்கிறது?

*திறவுகோல்களின் பணிநிலைதான் அந்த அதிகாரம். அதனைக் கிறிஸ்து தனது சபைக்குக் கொடுத்தார். பூமியிலே மனந்திரும்பும் பாவியின் பாவங்களை மன்னிக்கவும், அதேவேளை மனந்திரும்பாத பாவி மனந்திரும்பாதிருக்கும் வரைக்கும் அவனது பாவங்களை மன்னியாதிருக்கவும் அவர் கொடுத்த அதிகாரம் அது.*

மரணத்தினின்று அவரது உயிர்த்தெழுதலின் பின்பு, பரமேற முன்பதாக, எமது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து தனது அப்போஸ் தலர்கள்மீது தன்சுவாசத்தை ஊதியபோது கூறியதாவது, "பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள், எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர் களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர் களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும்" (யோவான் 20:22–23).

லூத்தரன் ஆராதனைகளுக்கு விஜயம் செய்யவரும் சிலர், பொதுவான பாவ அறிக்கையின்போது எமது போகதர் "இந்த பாவ அறிக்கையின் நிமித்தம், நான், வார்த்தையின் அபிஷேகிக்கப் பெற்ற பணியாளனாயும் அழைக்கப்பட்டவனாயும் உங்கள் அனைவருக்கும் தேவனுடைய கிருபையை அறவிப்பதுடன், இயேசுக்கிறிஸ்துவின் கட்டளைப்படியும் அவர் சார்பாகவும் நான் உங்கள் பாவங்கள் எல்லாவற்றையும் பிதாவுடைய நாமத்திலும், திருமைந்தனின் நாமத் திலும், தூய ஆவியானவரின் நாமத்திலும் மன்னிக்கிறேன்" என்று கூறிப் பாவங்களை மன்னிப்பதையயிட்டு ஆச்சரியப்படுவதுண்டு.

எமது லூத்தரன் அறிக்கைகள் எமது போதகர் ஏன் இப்படியாகக் கூறுகிறார் என்பதைப் புரிந்துகொள்வதற்கு எமக்கு உதவுகிறது: "இதனைப் பேசும் மனிதனின் குரலோ அல்லது அவரின் வார்த்தையோ பொருட்டல்ல, மாறாக, எமது பாவங்களை மன்னிக்கும் தேவனுடைய வார்த்தையே. அது தேவனின் சார்பாகவும் தேவனின் கட்டளைப்படியும் பேசப்படுகிறது (AC XXV.3)

பாவ மன்னிப்பு என்பது எந்த அறுவைசிகிச்சையோ, மருந்தோ, சிகிச்சையோ, ஆற்றுப்படுத்துதலோ அல்லது ஆலோசனையோ எமக்கு வழங்க இயலாததான தேவனுடைய ஜீவனை அருளும், நிச்சயமானதுமான வார்த்தையாகும். பாவமன்னிப்பு

# பாவ அறிக்கையும் பாவமன்னிப்பும் பற்றியதென்ன?

பற்றியதான ஆண்டவருடைய வார்த்தை எமது பாவத்தைப் பூசிமொழுகுவதோ அல்லது மறைப்பதோ அல்ல. சீக்கிரத்திலே மங்கிப்போகும் ஒரு தற்காலிக நிவாரணமும் அல்ல அது. பாவ மன்னிப்பையிட்டதான எமது கர்த்தரின் வார்த்தையானது பரிசுத்த திரியேகரான தேவனுடன் எம்மை ஒப்புரவாக்குவதாய் உள்ளது.

லூத்தர் இதனையிட்டு நன்றாக எழுதியுள்ளார், "தேவன்தாமே இதனைக் கேட்கும்படி எமக்குக் கட்டளை யிடவில்லை என்றால், எந்த ஒரு மானித இதயமும் ஆதனை வாஞ்சிப்பதற்குத் துணிவதென்பது மிகப்பெரும் காரியமாகும். ஆனாலும் அவர் தேவன் என்பதால், அவர் எவராலும் கிரகித்தும் பார்க்க இயலாத அளவுக்கு தாராளமாயும் அபரிமிதமாயும் வழங்கும் கௌரவத்தை அவர் கோரிநிற்கிறார்; இது ஒரு நித்திய, வற்றாத நீரூற்றுப்போல, எவ்வளவுக்கெவ்வளவாக அது பீறிட்டுப் பாய்கிறதோ அவ்வளவுக்கவ்வளவாக அது தொடர்ந்தும் வழங்கியபடியே இருக்கும். அவரிடமிருந்து நாம் அதிகமும் மேன்மையுமான காரியங் களைக் கேட்பதைவிட அவர் தீவிரமாக வாஞ்சிப்பது வேறேதும் இல்லை. அத்துடன், இதற்கு மாறாக நாம் கேட்காவிட்டாலும், உறுதியுடன் கோராவிட்டாலும் அவர் சினங்கொள்வார்" (பெரிய வினாவிடை போதினி Large Catechism)

## தேவனுடைய வார்த்தையின்படி நீங்கள் நம்புவது எதனை?

*கிறிஸ்துவின் அழைக்கப்பட்ட பணியாளர்கள் அவரது தெய்வீக கட்டளையினால் எம்முடன் இடைப்படும்போது, குறிப்பாக அவர் பகிரங்கமாகவே மனந்திரும்பாத பாவிகளை அவர்கள் கிறிஸ்தவ திரு அவையில் இருந்து புறந்தள்ளி, தமது பாவங்களையிட்டு மனந்திரும்பி இனி மேம்பட்டுவாழும் வாஞ்சை கொண்டவர்களை மன்னிக்கும்போது, பரலோகத்திலுங்கூட எமது அன்பான கர்த்தராம் கிறிஸ்து தாமே இடைப்படுவதுபோலவே அது செல்லுபடியானதும், நிச்சயமானதுமான இருக்கும்.*

பாவத்தால் பாரப்பட்டவர்களாயும் பாரம் அழுத்தப் பெற்றவர்களாகவும் நாம் எமது போதகரிடம் சென்று, அவரது பணி நிலையின் நிமித்தமாக, எமக்கு கிறிஸ்துவின் வார்த்தையைப் பேசும் படிக்கும் கிறிஸ்துவின் சார்பாக எமது பாவங்களை மன்னிக்கும் படிக்கும் அவர் அழைக்கப்பட்டவர் என்பதை நாம் அறிந்தவர்களாக எமது பாவங்களை அறிக்கையிடக்கூடுமாய் உள்ளது. கிறிஸ்தவ திரு அவையின் ஊடாக, இயேசுக்கிறிஸ்து தனது சபைக்கு வழங்கிய ஊழியத்தின் பணிக்கு, தனது திறவுகோல்களின் பணிநிலைக்கு மனிதர்களை அழைத்திருக்கிறார். எனவே எமது போதர்கள் இயேசுக் கிறிஸ்துவின் சார்பாக, கிறிஸ்தவ திரு அவையினருக்கென இந்தப் பணிநிலையைப் பகிரங்கமாகக் கைக்கொள்கின்றனர். மேலும், சகல கிறிஸ்தவர்களும், பாவத்தின்மீதி துயருற்றிருக்கும் சக கிறிஸ்தவர் களைப் பிரத்தியேக ரீதியிலே தேற்றும்போது, ஒருவர் ஒருவருக்குக் கிறிஸ்துவின் மன்னிப்பை விஸ்தரிக்கின்றனர்.

ஒருசில வேளைகளிலே எமது போதகர்கள், குறிப்பிடத்தக்க துயருடன்கூட ஒருவரை அவர் பாவத்தில் இருந்து மனந்திரும்பும்வரைக்கும் கர்த்தருடைய பந்தியிலே கலந்துகொள்ளா திருக்கும்படி கூறக்கூடும். மனந்திரும்பாமல் அதே நிலைமை நீடிக்குமேயாக இருக்குமேயாயின், சபையினர் சார்பாக போதகர் அந்த நபரிடம் அவர் மனந்திரும்பும் வரைக்கும் சபையில் இருந்து விலக்கிவைக்கப்படுகிறார் என்பதைத் தெரிவிப்பார்.

ஒரு நபர் மனந்திரும்ப மறுப்பதன் விளைவாக தான் தற்போது தள்ளப்பட்டுள்ள மிகவும் ஆபத்தான சூழ்நிலையை இனங் கண்டுகொள்ளும்படி உதவும் கடைசி வாய்ப்பாக சபையிலிருந்து விலக்கிவைப்பது உள்ளது. சாத்தானின் செல்வாக்கினின்று ஒருவரை மீட்டு எடுக்கும் இறுதியான முயற்சியே இதுவாகும்.

## மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் திருவருட்சாதனமா?

பரிசுத்த பாவமன்னிப்புக்கு வெளிப்படையான கூறுகள் எதுவும் இராவிட்டாலுங்கூட, அதற்கு நிச்சயமாகவே கிறிஸ்துவின் ஸ்தாபகம் உள்ளது. லூத்தரன் அறிக்கைகள் பரிசுத்த பாவமன்னிப்பை ஒரு திருவருட்சாதனமாகக் குறிப்பிட்டுள்ளது (LC IV.74;Ap.XIII.4).

லூத்தரன் அறிக்கைகளுங்கூட ஞானமாகச் சுட்டிக் காட்டுவதாவது, "தேவனுடைய கட்டளை மற்றும் வாக்குத்தத்தங்கள் கொண்டுள்ளவைகள் கைக்கொள்ளப்படும்வரைக்கும், எந்த ஒரு புத்திசாலியும் திருவருட்சாதனங்களின் எண்ணிக்கை பற்றியோ அல்லது அதன் சொல்லியல் பற்றியோ சொற்புரட்டுச்செய்ய முடியாது" (AP XIII.17).

பரிசுத்த பாவமன்னிப்பைப்பற்றி, அதனை சுவிசேஷத்தின் வாய்மூலப் பிரகடனத்துடனும் பரிசுத்த ஞானஸ்நானத்திலே தொடரும் வாழ்க்கையுடனும் தொடர்புபடுத்தி லூத்தர் அடிக்கடி பேசுகிறார். லூத்தரனியலிலே இரண்டு திருவருட்சாதனங்களைப்பற்றி – அதாவது ஞானஸ்நானம், பரிசுத்த திருவிருந்து – பேசுவது வழமை. ஆனாலுங்கூட, நாம் பின்வருவதை மனதில் இருத்திக்கொள்வது நல்லது: "தேவன் தனது கிருபையிலே அபரிமிதமானச் செழிப்பானவர்: முதலாவதாக, பேசப்பட்ட வார்த்தையூடாக, அதனாலே தான் பாவமன்னிப்பு பற்றிய செய்தி முழு உலகுக்கும் பிரசங்கிக்கப் படுகிறது; இரண்டாவதாக, ஞானஸ்நானத்தினூடாக; மூன்றாவதாக, திருபீடத்தண்டையில் இடம்பெறும் பரிசுத்த திருவருட்சாதனமூடாக; நான்காவது, திறவுகோல்களின் வல்லமையினூடாக; இறுதியாக, சகோதரர்களின் பரஸ்பர உரையாடலினூடாகவும் தேற்றுதல் களினூடாகவும்" (SA III.4.1).

## பிரத்தியேக பாவமன்னிப்பு என்பதும் அதன் நன்மையும் என்ன?

எமது லூத்தரன் அறிக்கை கூறுகிறது, "சபைகளிலே பிரத்தியேக பாவமன்னிப்பு தக்கவைக்கப்படுவதுடன், அது பயன்படாமைக்குள் தள்ளப்பட அனுமதிக்கக்கூடாது என எமக்குள் கற்பிக்கப்படுகிறது" (AC XI). மிசூரி திருப்பேரவையின் ஸ்தாப பிதாவான C.F.W. வோல்தர் என்பவர் கூறியுள்ளதாவது, போதகர் ஒருவர், ஒரு சுவிசேஷக வழிமுறையிலே, கவனமான அறிவுறுத்தலுடனும் ஊக்கமூட்டுதலுடனும், பிரத்தியேக பாவ அறிக்கையையும் பாவமன்னிப்பையும் பாராட்டுவதனூடாக, பிரத்தியேக பாவ அறிக்கையும் பாவமன்னிப்பும் பொதுவான பாவ அறிக்கைக்கும் பாவமன்னிப்புக்கும் மேலதிகமாகப் பயன்படும்படிக்கான இலக்குடன் கைக்கொள்ளப்படும்படியாகச் செயற்படவேண்டும். [2]

மேய்ப்புக்கரிசினையின் நடைமுறையிலே பிரத்தியேக பாவ அறிக்கையும் பாவமன்னிப்பும் மிக முக்கியமானதோர் கருவியாகும். போதகர்கள் பாவ அறிக்கையையும் பாவமன்னிப்பையும் பல்வேறு விதப்பட்ட சூழ்நிலைகளிலே பயன்படுத்துவதுண்டு – உதாரணமாக, திருமண மற்றும் குடும்பப் பிரச்சினைகளின்போதும், அதுபோன்றதான இன்னபிற மேய்ப்புப்பணிசார் ஆற்றுப்படுத்தல் சூழ்நிலைகளின்போதும். தம்மிடம் கலக்கமும் ஏக்கமும் உள்ள இதயங்களுடன் வருபவர் களின் வாழ்வுகளுள் மன்னிப்பையும் குணப்படுத்தலையும் தருவிப்பதற் காக பிரத்தியேக பாவ அறிக்கையும் பாவமன்னிப்பும் போதகர்களால் பயன்படுத்தப்படுவதுண்டு.

எமது சபையின் பாடல்நூல், லூத்தரன் ஆராதனை, தனிப்பட்ட பாவ அறிக்கைக்கும் பாவமன்னிப்புக்குமான ஒழுங்கைக் கொண்டுள்ளது (பக். 110–111). இந்த ஒழுங்கானது உங்களது போதகரின் விஜயத்தின் பின்புலத்திலே பயன்படுத்தப்படலாம். பிரத்தியேக பாவ அறிக்கை மற்றும் பாவமன்னிப்புக்கான ஒழுங்கானது குறிப்பான பாவங்கள் அறிக்கையிடப்படுவதை ஆலோசனையாக வழங்கினாலும், நிச்சயமாகவே அதனை நிர்ப்பந்திக்கவில்லை. மேலும் போதகர்கள் அவர்களின் திருநிலைப்படுத்துதல்களின்போது அவர்களுக்கு அறிக்கையிடப்படும் பாவங்களை வெளிப்படுத்தக் கூடாது எனும் சத்திரப்பிரமாணத்தைச் செய்வார்கள். ஒரு லூத்தரன் போதகர் கூறுவதுபோல, "போதகரின் செவியானது ஒரு கல்லறை. அதற்குள் செல்வது எதுவும் வெளியே வராது."

## முடிவாக

பாவ மன்னிப்பிலே களிகூர்ந்து, சோதனைகளை எதிர்த்துநிற்க பெலத்தைத் தேவன் தரும்படியாகவும், அவரை மகிமைப்படுத்தும் வாழ்வுகளை வாழும்படியாகவும், அவரது பரிசுத்த மானதும் பூரணமானதுமான சித்தத்துக்கு இசைவாக நாம் செய்வத னூடாக அவரைப் பிரியப்படுத்தும்படிக்குமாக நாம் ஜெபிக்கிறோம். அப்படிச் செய்யும்போது நாம் எமது பாவங்களையிட்டு விழிப்பறிவு கொண்டவர்களாக இருப்பதுடன், எமது கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் நிமித்தமாக தேவனுடைய மன்னிப்பை நாடி அதனை வாஞ்சித்தவர்களாக, அவரது எல்லையற்ற இரக்கங்களுக்கு அடைக்கலம் தேடி நாம் ஓடுகிறோம். பாவ அறிக்கை மற்றும் பாவமன்னிப்பு எனும் கொடைக்காகத் தேவனுக்கு நன்றி!

1 *சாய்வெழுத்துகளில் உள்ள வார்த்தைகள், லூத்தரின் சிறிய வினாவிடைபோதினியில் இருந்து பெறப்பட்ட மேற்கோள்களாகும்.*

2 *C. F.W. வோல்தர் (Walther), மேய்ப்புப்பணி இறையியல், அதி.XVI.*

கலாநிதி A.L. பர்ரி (Barry)
தலைவர்,
லூத்தரன் சபை – மிசூரி திருப்பேரவை